# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2110/47 - 2019 පෙබරවාරි මස 15 වැනි සිකුරාදා - 2019.02.15

*2110/47 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### கமத்தொழில், கிராமியப் பொருளாதார விவகாரங்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருக்குப் பொறுப்புக்களையும் அதிகாரத் தத்துவங்களையும் சாட்டுதல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கமத்தொழில், கிராமிய பொருளாதார விவகாரங்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் என்ற வகையில் எனக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத் தத்துவங்களையும் மற்றும் பொறுப்புப் பணிகளையும் குறித்த சட்டத்தின் பிரகாரம் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட கருமங்களை நிறைவேற்றும் பொறுப்புக்களையும், அதற்கான அதிகாரத் தத்துவங்களையும் அரசியலமைப்பின் 44(5) ஆம் உறுப்புரையில் காணப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க கமத்தொழில், கிராமியப் பொருளாதார விவகாரங்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் வசந்த லக்ஷ்மினாத் அலுவிகார அவர்களுக்கு ஒப்படைக்கின்றேன் என்பதுடன், அமைச்சின் விடயப் பரப்பில் வருகின்ற சகல கருமங்கள் பற்றி ஆராய்ந்து பார்த்தல், தலையிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் முதலியனவும் இராஜாங்க அமைச்சருக்கு உண்டு எனவும் இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன்.

**அட்டவணை**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கருமங்களும் பொறுப்புக்களும்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *செயற்படுத்தவேண்டிய சட்டம்* |
| 1. பயனுள்ள காணி முகாமைத்துவம், முறையான நீர் வளங்கள் பாதுகாப்பு மற்றும் உயர்ந்த மனித வளங்கள் பயன்பாடு என்பவற்றினூடாக சுற்றாடல் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் விவசாயப் பொருளாதாரத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றுக்குத் தேவையான பங்களிப்பைச் செய்தல். | 1. ஹரித தனவி அபிவிருத்தி அதிகார சபை (ஹதபிம) | 1. 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டம் |




*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கருமங்களும் பொறுப்புக்களும்* | *திணைக்களங்கள், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *செயற்படுத்தவேண்டிய சட்டம்* |
| 2. பலவகை விவசாயத் துறைகளில் ஈடுபடுவோருக்கு கல்வி மற்றும் ஆராய்ச்சி வசதிகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கையை எடுத்தல். | 2. இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபை | 2. 1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை பற்றிய சட்டம் |
| 3. இலங்கையில் அறுவடைக்குப் பின் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான ஆராய்ச்சி நடவடிக்கைகளை இனங்கண்டு, அத்தகைய நடவடிக்கைகளுக்கு இணங்க அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்ளல், உற்பத்திகளினதும் அவற்றின் விற்பனைகளினதும் தரத்தை அதிகரிப்பதற்கு உதவும் தொழில்நுட்ப முறையை பிரபல்யப்படுத்துதல், அறுவடைக்குப் பின் தொழில்நுட்பம் பற்றிய பயிற்சிகளை வழங்குதல் என்பவற்றினூடாக உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் தரத்தையும் மற்றும் பெறுமதி சேர்த்தலையும் நுகர்வோருக்கு உறுதி செய்யும் பொருட்டு தேவையான திறமுறைத் திட்டங்களைத் தயாரித்தல். | 3. அறுவடைக்குப் பின் தொழில்நுட்ப முகாமைத்துவ நிறுவகம் | 3. 1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகள் |

பீ. ஹரிசன்,
கமத்தொழில், கிராமிய விவகாரங்கள்,
கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில்
மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்.

கமத்தொழில், கிராமிய விவகாரங்கள், கால்நடை
வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில்
மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு,
இலக்கம் 288, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மாவத்தை,
ராஜகிரிய,
2019, பெப்புருவரி 13.

*03-202*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.